சிவமயம்

அரியாலை மேற்கு

அண்ணாமலை சிவசக்தி ஆலயம்

அருள்மிகு பொன்னூஞ்சல் பாடல்கள்

ஆக்கம் :: அரியாலையூர் கி.சிவதாசன்

"அண்ணமார் ஆலய வரலாறு"

சைவ சமயம் சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டது. ஆரம்பம், எதுவென வரையறையிட்டுக் கூற முடியாத இம்மதம் மனித வாழ்வின் வாழ்வியல் தத்துவத்தை மையமாகக் கொண்டு விளங்குகின்றது. ஆதி முதலான சிவபெருமான் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய செயற்பாடுகளுக்காக பலவிதமான தோற்றங்களை எடுத்துள்ளார். அவற்றில் சில நாம் விரும்பி வணங்கும் தெய்வங்களாக இருக்கின்றன. மேலும் சில குலத்தினர் இறைவனைப் பல்வேறு வடிவங்களாக உருவகித்து வணங்கி வருகின்றார்கள். அவ்வாறு ஏராளர் என்னும் குலப்பரம்பரையினரால் வணங்கப்பட்டு வந்த தெய்வ வடிவமே அண்ணமார் என்னும் சிவத்தோற்றமாகும். அதனை நாம் எம் முன்னவர்கள் மூலம் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

எம் இறைவனாகிய சிவபெருமான் தன் மீது பக்தி கொண்ட பெண்ணுக்காக கூலித்தொழிலாளியாக வந்த போது பீரம்படி பட்டார் என எமது சமய வரலாறு கூறுவதை நாம் அறிந்துள்ளோம். ஏராளர் எனப்படுவோர் வயல், தோட்ட நிலங்களைப் பண்படுத்தி வேலை செய்யும் தொழிலாளர்கள் ஆவர். இவர்கள் தமது வேலைகளை ஆரம்பிக்கு முன்னர் தம்மிடம் எளிதில் கிடைக்கக் கூடியதாக இருந்த தண்டத்தை (பொல்லு) எடுத்து அக்காலத்தில் அதனை ஓரிடத்தில் வைத்து பூசித்து தம் கடமைகளை மேற்கொண்டுள்ளார்கள். அவர்கள் இத் தண்டத்தையும், பிரம்பினையும் மூல தெய்வங்களாகக் கொண்டு வணங்கி வந்துள்ளார்கள். மூத்த முழுமுதல் கடவுள் சிவன் ஆனபடியால் அந்தப் பாமர மக்கள் அண்ணன் என சிவனை அழைக்கலாயினர். இதுவே காலப்போக்கில் அண்ணமார் எனத் திரிபு பெற்றது எனக் கருத இடமுண்டு. பல ஆய்வாளர்கள் இத்தெய்வ வடிவத்தைப் பற்றி பல்வேறு கதைகளைக் கூறியிருப்பதும் நாமறிந்ததே. யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏராளர் பரம்பரையினர் வாழும் இடங்களில் மட்டுமே இவ்வாலயம் காணப்படுகின்றது. சில இடங்களில் இவ் அண்ணமார் ஆலயங்கள் வீநாயகர் ஆலயங்களாகவும், சிவன் ஆலயங்களாகவும் புனருத்தாரணம் செய்யப்பட்டு ஆகம விதிகளுக்கு அமைவாக மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

அரியாலை மேற்கில் பிரப்பங்குளப்பற்றில் புங்கன்குளத்தின் வடக்குப் புறமாக உள்ள வடலி வளவில் அமைந்துள்ள இவ் அண்ணமார் ஆலயம் அல்வாய் தெற்கில் "கிறிச்சியால்" என்னும் இடத்திலிருந்து 1925ம் ஆண்டிற்கு முன்னர் கொண்டுவரப்பட்டது. நாகர் என்பவர் வடமராட்சி அல்வாய் ஊரிலிருந்து யாழ்ப்பாணம் அரியாலைக் கிராமத்திற்கு தொழில் தேடி வந்து வசித்த காலத்தில் முதலில் தாம் வாழ்ந்த கொட்டையடித் தெரு (திருமகள் வீதிப் பகுதியில்) பத்திரியார் வளவில் சிறு குடில் ஒன்றினை அமைத்து அதில் இவ் அண்ணமார் தெய்வத்தை வைத்து பரிபாலித்து வந்தார்.

பின்னர் இவர் வாழ்வீடம் மாறி புங்கன்குளம் அருகில் உள்ள வடலி வளவில் இருந்த மாமரத்தின் கீழ்க் குடிலால் ஆன ஆலயம் அமைத்து பரிபாலனம் செய்து வந்தார். அப்பொழுது எல்லாம் பூசைகள் தினமும் இடம்பெறுவதில்லை. வருடந்தோறும் வைகாசி மாத விசாகத்தின் முன் வரும் வாரத்தில் விளக்கேற்றி விசாகம் கழிந்து வரும் முதல் வெள்ளி இரவிரவாக பொங்கல் பொங்கி மறுநாட்காலை பழ வகைகள், பலகார வகைகள் மடைபரவி ஆடு, கோழிகளை பலியிட்டு வேள்வி வழிபாட்டினைச் செய்து வந்தார்கள். இவ் வேள்வியின் போது வாழ்வில் நிகழப்போகும் இன்ப துன்பங்களை கலையாடுவோர் கூறுவார்கள். இவ்வாறு ஆடும் கலைகள் வல்லி(வெள்ளையர்) அவர்கள் மூலம் அண்ணமாரும், இலட்சுமியாரிடம் வைரவரும், வள்ளியாரிடம் காளியும், சண்முகம் என்பாரிடம் அம்மனும், இரத்தினம் (உருளி) அவர்களிடம் நரசிங்கரும் குடிகொண்டு அவர்களை ஆட்டுவித்து தம் வாக்கினை இவர்கள் மூலம் வெளிப்படுத்தினர். இவ்வாறு கூறப்பட்ட வாக்குகள் பலிதமானதாக எம் முன்னவர்கள் கூற நாம் கேட்டும் பார்த்தும் இருக்கிறோம். காலப்போக்கில் ஆலயங்களில் ஆடுகள், கோழிகள் பலியிடுதல் தடை செய்யப்பட வேண்டும் என்ற நிலை தோன்றியபோது 1953ம் ஆண்டு பலியிடுதல் இவ்வாலயத்தில் கைவிடப்பட்டது. இவ்வாலயத்தின் முன்மாதிரியைப் பின்பற்றி யாழ்ப்பாண மாவட்டத்தின் பல ஆலயங்களில் இவ்வாறு பலியிடல் முறை கைவிடப்பட்டது என்பதை நாம் அறிவோம். பொங்கல், வழிவெட்டல் முறை வேள்வி என்ற பெயரில் வருடா வருடம் நடைபெறுகின்றது.

இவ் அண்ணமார் ஆலயம் இற்றைவரை நான்கு தலைமுறையினரால் பரிபாலிக்கப்பட்டு வரப்படுகின்றது. முதல் தலைமுறையாக நாகரும், இரண்டாவது தலைமுறையாக வல்லி (வெள்ளையர்), வீட்டுணு ஆகியோரும், மூன்றாவது தலைமுறையில் சண்முகம், நாகமணி, அரியகுட்டி, கந்தையா (பொட்டு) ஆகியோரும் வழிவழி வந்துள்ளனர். இவர்கள் அனைவரும் இன்று உயிருடன் இல்லை. இவர்களின் வழி வந்தோர் நான்காவது தலைமுறையாக இருந்து இவ்வாலய வளர்ச்சிப் பணியில் அரும்பங்காற்றி வருகின்றார்கள். இவ்வாலயத்தில் அண்ணமாருடன், காளி, நரசிங்கர், காவல் தெய்வமான வைரவர் ஆகிய தெய்வங்கள் வழிபடு தெய்வங்களாக இருக்கின்றன.

மேலும் வருடாந்த வேள்விப் பொங்கலின்போது அண்ணமார் பொங்கலை வல்லி (வெள்ளையர்) வழிவந்தோரும், காளியம்மன் பொங்கலை வேலுப்பிள்ளை, கந்தையா (பொட்டு) வழிவந்தோரும், நரசிங்கர் பொங்கலை "குடும்பிவேலர்" என்று அழைக்கப்பட்ட வேலுப்பிள்ளை, முத்து, நாகலிங்கம், திருநாவுக்கரசு வழிவந்தோரும், காவல் தெய்வமான வைரவர் பொங்கலை வீட்டுணு வழிவந்தோரும், எட்டாம் மடைக்குரிய வழந்துப் பொங்கலை இளையதம்பி, நாகமுத்து, நடராசா வழிவந்தோரும் , ஊர் மக்களும் சிறப்பாக ஒன்று கூடி கொண்டாடிவருகின்றார்கள். பொங்கல் மடைபரவல் வேலைகளை வீட்டுணு, அரியகுட்டி, செல்லர்(செல்லையா),

நாகமணி, நடராசா ஆகியோரும் முன்னின்று செய்து வந்துள்ளார்கள்.. ஆதிகாலத்திலிருந்து இடம்பெற்று வந்த சித்திராப் பௌர்ணமி குளிர்த்தி கடந்த சில வருடங்களாக இடைநிறுத்தப்பட்டு, பங்குனி மாதத்தில் வரும் இரண்டாம் திங்களில் அன்னதான நிகழ்வு இடம்பெற்று வருகின்றது.

முன்னர் வடக்கு முகமாக வாயில் அமைந்திருந்த இவ்வண்ணமார் ஆலயம் பின்னர் புனருத்தாரணம் செய்யப்பட்டு கிழக்கு முகமாக வாயில் கொண்ட ஆலயமாக மாற்றம் செய்யப்பட்டது. இதுவே இன்றைய தோற்றமாகும். இவ்வாலயம் அமைந்திருக்கும் காணியை அதன் உரிமையாளரான காலம் சென்ற அ.தம்பிப்பிள்ளை அவர்கள் 1949ம் ஆண்டு ஐப்பசி மாதம் 12ம் நாள் அப்போது ஆலயப் பரிபாலகராக இருந்த நாகர் வீட்டுணு அவர்களிடம் முறைப்படி பிரசித்த நொத்தாரிசு வே.க.சுப்பிரமணியம் அவர்களின் மூலம் தர்ம ஆதனமாக வழங்கினார். காணி உரிமையாளர் இக் காணியை ஆலயத்திற்கென வழங்கியபோது "இவ் அண்ணமார் ஆலயத்தின் மீது கொண்ட பக்தி மேலீட்டின் காரணமாகவும், தன்னைக் கொண்டேவும், வழி நடத்தும் ஒரு தெய்வமாக அண்ணமார் தெய்வம் விளங்குவதாகவும், அதன் காரணமாகவே இக்கைங்கரியத்தைத்தான் செய்துள்ளதாகவும் காணி உறுதியில் குறிப்பிட்டுள்ளார்.

இவ் அண்ணமார் ஆலயம் மீள் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு 1995ம் ஆண்டு சித்திரை மாதம் 9ம் திகதி கும்பாபிஷேகம் நிறைவேற்றப்பட்டது. இதன் பின்னர் இவ் ஆலயம் "சிவசக்தி" ஆலயம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. சைவப் பிராமணர்களால் பூசை மேற்கொள்ளப்பட்டு வந்தது. கும்பாபிஷேகம் நிறைவேற்றப்பட்ட அதே ஆண்டு பிற்பகுதியில் யாழ்ப்பாண மண்ணில் ஏற்பட்ட இடம்பெயர்வு காரணமாகவும், ஆலயப் பகுதி இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த காரணத்தினாலும் 2002ம் ஆண்டு வைகாசி மாதம் வரை இவ்வாலயத்தில் பூசைகள், பொங்கல்கள் எதுவும் நடைபெறவில்லை. மீண்டும் இவ்வாலயத்தில் 27.06.2002ம் ஆண்டு கும்பாபிஷேகம், மண்டலாபிஷேகம், சங்காபிஷேகம் ஆகியன நிறைவேற்றப்பட்டு பூசைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த நிகழ்வுக்காக அயலவர்களும், ஆலய வழித்தோன்றல்களும், பக்தி கொண்ட அடியார்களும் பெருந்தொகைப் பணத்தினை ஆலய பராமரிப்பாளர்களிடம் வழங்கி உதவினார்கள். இவ் ஆலயம் இந்து கலாசார அமைச்சின் கீழ் பதிவு பெற்றுள்ளது. இப் பதிவில் ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர்களாக திரு.ச.பஞ்சாட்சரம் தலைமையில் திரு தி.சின்னையா, திருமதி சி.இராசகிளி, திருமதி நா.புஸ்பமணி, திரு செ.செல்வநாதன், திரு வ.முருகேசு, அமரர்களான க.சிவபாதம், இ.சரஸ்வதி ஆகியோரும்,.

பராமரிப்பாளர்களாக திருமதி பாஸ்கரன் தேவகி, திரு வே.அருட்செல்வன் ஆகியோரும் தெரிவின் மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளார்கள். மேலும் இவ்வாலயத் திருப்பணிகளை மேற்கொள்ள நிர்வாக சபை ஒன்றும் உள்ளது இதில் தலைவர் செயலாளர் தவிர்ந்த செ.இராசரத்தினம், நா.சுகுணதாசன், திருமதி. சாந்தினி திருச்செல்வம், திருமதி ஸ்ரீ.ஜனதா, திரு வே.அருள்விந்தன் ஆகியோரும் அடங்குவர். இவ் ஆலயப் பூசகர்களாக வழிவழியே நாகர், வீட்டுணு, வி.அரியகுட்டி, வ. சண்முகம், ச.பஞ்சாட்சரம், க.தவம், நா.யோகநாதன், இ.மதிகரன், இ.சபேசன் ஆகியோர் பணியாற்றிவந்துள்ளார்கள். இவ் ஆலயம் சிறப்புறு மூர்த்திகரமானது. இவ்வாலய சுற்றாடலில் உள்ளவர்கள் பலரின் நல்வாழ்விற்கு அண்ணமார் அருள்பாலித்துள்ளார். அதன் காரணமாக ஆலயத்தின் மீது அதீத நம்பிக்கை கொண்டவர்கள் பல ஆலய உபகரணங்களை இவ்வாலயத்திற்கு வழங்கியும், பணமாகவும் தம் நேர்த்தி நிறைவேற்றுதல்களை செய்துள்ளார்கள். இவ்வாலயத்தில் அடியார்கள் நம்பிக்கை வைத்து வேண்டுதல் செய்தால் அது கூடிய கெதியில் பலனளிப்பதாகப் பலரும் கூறி வருவது ஆலயத்தின் சிறப்பிற்கு எடுத்துக்காட்டாகும்.

சிவன், சக்தி, நரசிம்மர் ஒருங்கிணைந்த குடும்ப வடிவினராய் திகழும் இவ்வாலயம் அடியார்களின் வாழ்வில் நல் மாறுதல்களை ஏற்படுத்தி அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்து வருவதானது அரியாலை மக்களுக்கு ஒரு நிறைவு சக்தியென்றே கூறவேண்டும்.

"அண்ணமாரை வேண்டுவோம்
என்றும் எம் குறைகளை நிறைவு செய்வோம்."



உ

வாணி துணை

அண்ணாமார் அந்தாதி

காப்பு

முன்னவனே மூத்தவனே முழுமுதலாம் கணபதியே
நன்னெறிகள் காட்டுமுயர் நாயகனே – இன்புறவே
அந்தாதி பாட்டிசைத்து அண்ணாமாரை வணங்குதற்கு
சுந்தரனே நல்லருள் தா!

ஆசிரிய விருத்தம்

1. ஆதியும் அந்தமும் ஆகி
யாவரும் அறியா வண்ணம்
பாதியாய் அம்மை சேர
பரந்த பேர் இறையே
சோதியாய் நீண்டு நின்ற
சிவப் பெரும் பொருளே
ஆதியே அண்ணாமார் வடிவமே
அரியாலை மண்ணிலே நிறைவாய்!

2. நிறைவாய் நின்னருள் ஈயும்
நீள்சடை நிர்மல மூர்த்தி
குறைவில்லா வாழ்வு தந்து
காக்கும் எங்கள் குலவடிவே
பிறைசூடும் பெருமானே பெருநிதியே
பெருமாளோ டிணைந்த அரனே
முறையாப் பூசை செய்தே
உமை வணங்குவோம் அண்ணாமாரே!

3. அண்ணமாரே பொல்லேந்தும் கிழவா
உழவுக்கு உறுதுணை ஆனவா
மண்மிசை வாழ்வோர்க் கெல்லாம்
முழுமுதற் தெய்வம் நீயே
விண்ணவர் வணங்கும் கோனே
விளங்கு மெய்ஞான வடிவே
எண்டிசை போற்றும் அரியாலை
அற்புதனே கடைக்கண் காட்டுவாயே!

4. காட்டுவாய் கருணை செய்வாய்
கலிநடம் புரிந்து நிற்பாய்
ஆட்டுவாய் ஆக்குவாய் அழிப்பாய்
ஆலமும் உண்டு களிப்பாய்
மீட்டுவார் இசையினைக் கேட்டு
மெய் மறந்து போகும்
பாட்டுடைத் தலைவா எங்கள்
பாவங்கள் போக்கி அருள்வாய்!

5. அருள் சுரந்து காக்கும்
ஐயனே முக்கண் முதல்வா
அருவா யிருந்து உலகாளும்
ஏந்தலே சிவலிங்கச் செல்வா
குருவாகி குருந்த மரநிழலில்
கொலுவிருந்த கோமள வாகனனே
அருள்நிறை சிவசக்தி வடிவமான
அண்ணமாரே பணிவோம் நின்னடியே!

6. நின்றாடல் செய்யும் நடராசனே
நம்மவர் தோற்றத்தில் அண்ணமாரே
பன்னக மாலையணி பரம்பொருளே
பார்தாங்கும் பார்வதி நாயகனே
பன்றிகள் பரிதவிக்கத் தாயுமானவனே
பாட்டிசைத்துப் பாவலனைக் காத்தவனே
துன்பங்கள் தீர்க்கும் தயாபரனே
தரிசனம் தருவாய் சிவக்கொழுந்தே!

7. சிவபெருமான் என்றே உன்னை
தினமும் நாம் நினைந்து
புவனமதில் எம் கருமம்
பெரு நிறைவாய்க் கொள்வோம்
நவகோள்கள் காட்டும் தீமைகள்
நன்மையாய் என்றும் மாற
சிவசக்தி வடிவமார் அண்ணமாரே
தந்திடுவாய் நல்வரம் எங்களுக்கே!

8. எங்கள் வாழ்வும் வளவும்
எந்நாளும் ஏற்றமுறச் சீர்செய்து
இங்குற்றார் நன்றே நலமுற
அண்ணமார் தோற்றம் கொண்ட
திங்கள் சூடிய பெருமானே
தித்திக்கும் பொங்கல் வைத்து
இங்கிதமாய் பழவகைகள் மடைபரப்பி
இதமாக வேள்வி செய்குவோமே!

9. செய்யும் நற்செயல்கள் யாவும்
செயம் பெறவே செய்யும்
ஐயனே அண்ணமார் தெய்வமே
ஏழ்மையை அகற்றும் தூயனே
கயல்விழி கங்காவை முடியிருத்தி
கையில் சூலமும் தாங்கி
மெய்யெலாம் சுடலைப் பொடிபூசும்
மதுசூதன் மைத்துணனே போற்றி!

10. போற்றி எல்லா உயிர்க்கும்
வித்தான பிரமனடி போற்றி
பாற்கடல் வாசம் செய்யும்
பரந்தாமன் கழல்கள் போற்றி
ஆற்றலும் அறிவும் நல்கும்
அபிராமி நாமம் போற்றி
ஆற்றாதார் குறைகள் நீக்கும்
அண்ணமார் போற்றி போற்றி!

திருப்பொன்னூஞ்சல்

காப்பு

நீர்நொச்சித் தாழ்விலுறை நித்திய சித்தியனே
பார்வதி தேவியவள் புத்திரனே – கூர்கொம்பே
அண்ணமார் பொன்னூஞ்சல் இசையோடு நாம் பாட
அண்ணலே வந்து அருள்!

எண்சீர் விருத்தம்

1. அல்வாய் கிறிச்சியாலில் குடியிருந்து பின்னர்
அரியாலை மேற்கினில் அமர்ந்த எம்பிரானே
நல்வரம் நல்கி நாளும் காக்கும்
நாரணன் நாத்தனே நாரணி பாகனே
வல்லபொன் கயிறெடுத்து ஆகாயம் முட்டப்
பொன்னூஞ்சல் வடிவாக நாம்கட்டி அழைத்தோம்
நல்லவனே எங்கள் அண்ணமார் தெய்வமே
நாடிநீர் வந்தமர்ந்து ஆட ரூஞ்சல்!

2. ஐங்கரனும் அழகுமிளிர் வேலவனும் அருகமர
அன்னை பார்வதியும் ஓருடலாய் சேர்ந்திருக்க
அங்கம் நிறைய ஆபரணங்கள் சூடி
அழகுநிறப் பட்டாடை பலவும் சாத்தி
தங்கநிற மேனியெங்கும் திருநீறு பூசி
சந்தனம் குங்குமம் சேர் திலகமிட்டு
புங்கன்குளம் அருகிருக்கும் வடலி வளவார்
புண்ணியனே அண்ணமாரே ஆட ரூஞ்சல்!

3. நான்முகனும் சரஸ்வதியும் மாலவனும் லக்குமியும்
நாட்டமுற நினதாட்டம் காண வந்தார்
மேன்மையுயர் இந்திரனும் தேவர்களும்
மகிமைநிறை நினதாட்டம் பார்க்க வந்தார்
வான்மதியும் சூரியனும் விண்மீன் கூட்டங்களும்
வானிருந்தே நினதாட்டம் ரசிக்க நின்றார்
சான்றோரும் பாமரரும் போற்றும் சிவசக்தி
சேர்வடிவ அண்ணமாரே ஆடீ ரூஞ்சல்!

4. நித்தம் வருமாண்டு வைகாசி விசாகத்து
முதல்வரும் வெள்ளி நாளன்று நாம்கூடி
புத்தம் புதிய பானைகளில் பொங்கலிட்டு
பலா வாழை மாம்பழங்கள் பலகாரங்கள்
பத்து வகையான மடைபரவி நரசிங்கர்
காளியுடன் உமக்குப் படையல் வைப்போம்
சித்தம் குளிர்ச்சி பெற்று அண்ணமாரே
சஞ்சலங்கள் தீர்த்தருள ஆடீ ரூஞ்சல்!

5. அவனியில் நீயன்றி அணுவும் அசையாதென
அழிவிலாச் சைவமதம் ஆழமுறச் சொல்லும்
புவனமேழும் ஆளுமை செய்யும் சீரே
புனிதமார் பக்தர்களின் கருணைக் கடலே
தவமுனிவர் சிந்தையிலே உறையும் சிவனே
தஞ்சமென வந்தோரை அணைக்கும் பரனே
சிவசக்தி கோலமாய் வடலி வளவில்
சுந்தரச் சுடரொளியே ஆடி ரூஞ்சல்!

6. கல்லினுள் தேரைக்கும் கருப்பை உயிருக்கும்
காலமெலாம் காத்திருந்து படி அளப்பாய்
கல்வியும் ஞானமும் செல்வமும் சீரும்
கனிவுறவே தந்துமெய் சிலிர்க்க வைப்பாய்
எல்லா வளமும் ஏராளர் நாமுறவே
ஆனந்த நிறைவுடனே பார்த் திருப்பாய்
பொல்லேந்தி நிற்கும் புதுமைசேர் கிழவா
பாசப் பேருருவே ஆடி ரூஞ்சல்!

7. பிட்டுக்கு மண்சுமந்து பிரம்படி பட்டவனே
பாலீந்து பாலகனை பாடவும் வைத்தவனே
கட்டுவிற கெடுத்து விலைசூறி விற்றவனே
கருங் குருவிக்கு உபதேசம் செய்தவனே
சுட்டவுடற் சாம்பரை வெண்ணீறாய் அணிந்தவனே
சுந்தரனை பித்தாவென பாட வைத்தவனே
சட்டம்பேசி மாமனாய் வழக்காடி வென்றவனே
சிவசக்தி வடிவுடையாய் ஆடே ரூஞ்சல்!

8. குண்டலங்கள் காதிருந்து ஆட ஆட
கங்கையும் முடிதனில் ஆட ஆட
மண்டையோட்டு மாலைகளும் ஆட ஆட
மாநாகமும் கழுத்தில் ஆட ஆட
தண்டமார் சூலமும் ஆட ஆட
தரமார் உடுக்கையும் ஆட ஆட
மண்ணக மாந்தரும் ஆட ஆட
மங்களமார் அண்ணமாரே ஆடே ரூஞ்சல்!

9. கண்ணப்பன் சுவைத்த தேனிறைச்சி உண்டாய்
கற்புநிறை மாதுமுன் குழந்தையும் ஆனாய்
மண்ணளந்த மாலவனை பெண்ணாகவும் கொண்டாய்
மலையை சிலையாக வளைத்துமே நின்றாய்
பண்பிலுயர் நந்தனுக்குத் தரிசனம் தந்தாய்
பாட வந்த பாவதரை ஓடவும் வைத்தாய்
எண்ணிலாத வரங்கள் தரும் அரியாலை
எங்களிறை அண்ணமாரே ஆடி ரூஞ்சல்!

10. ஆதியும் முடிவும் அறியா வண்ணம்
அடியும் முடியும் தெரியா வண்ணம்
மேதினி யெங்கும் பரந்து நிறைந்து
மேன்மைகொள் ஆகமங்கள் மறைகள் எல்லாம்
ஆதிமுதல் எங்கனும் புரிய வைத்து
அறவழியில் தருமநெறி மெய்ஞானம் பெற்றுவாழ
சோதியென நின்றுயர்ந்த யாழகத்து அரியாலை
திருத்தலமார் அண்ணமாரே ஆடி ரூஞ்சல்!

வாழ்த்து

செந்தமிழும் சைவமும் செழித்து வாழி
தர்மநெறி சாஸ்திரங்கள் தளைத்து வாழி
மந்திரமார் மறைகள் நான்கும் வாழி
மெய்ஞான நூல்கள் மண்ணில் வாழி
சொந்தவூர் அயலமர் மகாமாரி வாழி
சரஸ்வதி புவனேஸ்வரி பைரவர் வாழி
ஐந்துகரத் தானைமுகன் தாள்கள் வாழி
அரியாலை அண்ணமாரே வாழி! வாழி!!

மங்களம்

மங்களம் மங்களம் கணபதிக்கு மங்களம்
மங்களம் மங்களம் காளிக்கு மங்களம்
மங்களம் மங்களம் நரசிங்கருக்கு மங்களம்
மங்களம் மங்களம் அண்ணமாருக்கு மங்களம்

என் நன்றி.

வரலாற்றுக்கான தகவல்கள் வழங்கிய திரு.செ.சிவகடாட்சம், திரு.நா.யோகராசா, திரு.க.தவம் (பவுன்ராசா), திரு.இ.மதிகரன் ஆகியோருக்கும், அந்தாதி பாடலை எழுதும்படி வேண்டிய திரு.ச.பஞ்சாட்சரம் அவர்களுக்கும், பொன்னூஞ்சல் பாடலை எழுதும்படி தூண்டிய திருமதி கலாவதி தவம் அவர்களுக்கும், ஆலோசனை வழங்கிய திரு.ஏ.வீரசிங்கம் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

- ஆசிரியர் -



Sharp Photocopy & Computer Printing

- Ariyalai -



நூல் ஆசிரியருக்கு நன்றி.

இச்சிறிய நூலின் மூலம் எமது
ஆலய்ச் சிறப்பினை வெளிப்படுத்திய
இலங்கை இல்க்கியப் பேரவைச் செயலாளரும்,
சமரசன் நிதியாளருமாகிய அரியாலையூர்
சி.சிவதாசன் அவர்களுக்கு
உளமார்ந்த நன்றி!

Sharp photocopy & Computer Printing - Ariyalai